வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்
ந.க.எண்.3452/ஆ5/2024 நாள்.02/04/2025

......

பொருள் பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் – பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத்திட்டம் – புத்தாக்க கண்டுபிடிப்பிற்கு தேவையான பிரச்சனைகளை கண்டறிய மாநில அளவிலான கருத்துப்பட்டறை ஏப்ரல் 22ஆம் தேதி நடத்துதல் – தொடர்பாக

பார்வை தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவன இயக்குநர் கடித ந.க.எண்.0032/ 2025/SIDP/EDII, நாள்.26.03.2025

.....

தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனமானது மாணவர்களிடையே புத்தாக்க சிந்தனைகளை உருவாக்கும் விதமாக பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத்திட்டம் மற்றும் புத்தாக்கம் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டுதிட்டம் ஆகிய இரண்டு திட்டங்கள் செயல்படுத்தி வருகிறது.

பள்ளி மாணவர்கள் புத்தாக்க கண்டுபிடிப்பிற்கு தேவையான உள்ளூர் மற்றும் வெளியூர் பிரச்சனைகள் கண்டறியப்பட வேண்டியுள்ளது எனவும் பிரச்சனைகளை கண்டறிய மாநில அளவிலான கருத்துப்பட்டறை நடத்தி அதன்மூலம் கண்டறியப்படுகின்ற பிரச்சனைகளை மாணவர்களுக்கு வழங்கி அதிக அளவிலான புத்தாக்க சிந்தனைகள் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது என்றும் மாநில அளவிலான பிரச்சனைகள் கண்டறியும் கருத்துபட்டறையானது 22.04.2025 அன்று சென்னையில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது என பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்காணும்படி நடைபெறும் மாநில அளவிலான கருத்துப்பட்டறையில் புத்தாக்க கண்டுபிடிப்பிற்கு தேவையான பிரச்சனைகளை கண்டறிய விவாதிக்கும் பொருட்டு வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் தங்களின் தலைமையில் வழிகாட்டி ஆசிரியர்கள் மற்றும் அவர்களுடன் பணிபுரியும் பிற ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுடன் கலந்துரையாடி பிரச்சனைகளை பெற வேண்டும்.

1. பிரச்சனைகளை தொகுக்கும் போது ஒரே பிரச்சனை மீண்டும் மீண்டும் பதிவாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.
2. பிரச்சனைகளை தொகுக்கும் போது ஜாதி, மதம் மற்றும் அரசியல் சார்ந்த பிரச்சனைகள் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.
3. கருப்பொருள் ஒரிரு வார்த்தைகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

4. பிரச்சனை அறிக்கையானது 50 வார்த்தைகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
5. தமிழ் (அல்லது) ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இருக்கலாம்.

பெறப்பட்ட புத்தாக்க பிரச்சனைகள் அனைத்தையும் கீழ்காணும் படிவத்தில் பூர்த்தி செய்து இவ்லுவலக சுற்றுற்சூழல் ஒருங்கிணைப்பாளரிடம் 17.04.2025-க்குள் ஒப்படைக்குமாறு அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

<u>பள்ளி புத்தாக்க கண்டுபிடிப்பிற்கு தேவையான பிரச்சனைகள் கண்டறியும் படிவம்</u>

| வ. எண். | Name of the School | கருப்பொருள் (Theme) | பிரச்சனை அறிக்கை (Problem Statement |
|---|---|---|---|
| | | | |

02-04-25

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்கள்,
அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல் –
1. தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சென்னை
2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3. மாவட்டக் கல்வி அலுவலர்,
(இடைநிலைக் கல்வி)
வேலூர் மாவட்டம்
(இவ்லுவலக மின்னஞ்சல் மூலமாக)